**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், மாசி திங்கள் 18ம் நாள்**

**இ.ம.எண்.317/2024**
**இன்**
**அ.வ.எண்.136/2019**

அம்மணியம்மாள் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ஈஸ்வரி
2. விமலா
3. M. ராமு (எ) ராமசந்திரன்
4. K. ரத்தினசாமி
5. K. சிவசாமி
6. S.K.ஜெகநாதன்
7. கோபால்சாமி
8. மாராத்தாள்
9. வட்டாட்சியர், திருப்பூர் தெற்கு வட்டம்
10. நிலஅளவையர், திருப்பூர் தெற்கு வட்டம்
11. கிராம நிர்வாக அலுவலர், முத்தனம்பாளையம் ..எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 19.02.2026ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.வெங்கடாசலம் அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ராஜேஸ்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு

தரப்பு வழக்கறிஞர் திரு.M.கௌதம் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகியும் நிகழ்த்திய இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## <u>உத்தரவு</u>

அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க ஏற்பட்ட 581 நாட்கள் கால தாமதத்தை மன்னிக்க கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :**

**2.1** மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 22.08.2022 தேதியன்று அசல் வழக்கில் பரிகார பத்தியில் திருத்தம் செய்ய வேண்டி வாய்தா போடப்பட்டிருந்தது. 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3வது வாரத்தில் மனுதாரர் மஞ்சள் காமாலை நோய்யால் பாதிக்கப்பட்டிருந்ததால் அன்றைய தினம் வழக்கறிஞரை தொடர்பு கொள்ள இயலவில்லை. கடந்த 22.08.2022ம் தேதியன்று அசல் வழக்கில் தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

**2.2** மனுதாரர் மஞ்சல்காமாலை நோயிலிருந்து மீண்டு வந்ததற்கு பின்னிட்டு கண் அறுவை சிகிச்சை மேற்கொண்டதால் மருத்துவரின் ஆலோசனையின்படி 6 மாத காலம் ஓய்வு எடுக்கவேண்டியிருந்தது. மனுதாரர் வயோதிகத்தினாலும், ரத்த கொதிப்பாலும் பாதிக்கப்பட்டு நீண்ட தூரம் பயணம் செய்ய முடியாத நிலையில் உள்ளார். மேற்கண்ட காரணங்களால் மனுதாரரால்

அவரது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விபரத்தை அறிய இயலவில்லை. அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் மனுதாரருக்கு தற்போது தான் தெரியவந்துள்ளது. இந்நிலையில் மனுதாரரின் பழைய வழக்கறிஞர் கடந்த மாதம் இறந்து விட்டார்.

**2.3** கடந்த 22.08.2022ம் தேதியன்று மனுதாரர் வேண்டுமென்றே நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் இருக்கவில்லை. தவிர்க்க முடியாத காரணத்தால் தான் மனுதாரரால் முன்னிலையாக இயலவில்லை. எனவே அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுப்பதற்கு ஏற்பட்ட 581 நாட்கள் கால தாமதத்தை மன்னிக்க வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :**

**3.1** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. அசல் வழக்கில் பரிகார பத்தியை திருத்தம் செய்வதற்காக மனுதாரருக்கு நீதிமன்றம் பல வாய்ப்புகளை வழங்கியுள்ளது. நீதிமன்றம் வழங்கிய வாய்ப்புகளை மனுதாரர் சரியாக பயன்படுத்தவில்லை. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மருத்துவ காரணங்களுக்கான மருத்துவ சான்றிதழை தாக்கல் செய்யவில்லை.

**3.2** மனுதாரர்/வாதி தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. இ.ம.எண்.547/2019 மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனுதாரர் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், " மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**6. <u>தீர்வு</u> :–**

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனுதாரருக்கு 72 வயது ஆகிறது என்றும், கடந்த 22.08.2022ம் தேதியன்று அசல் வழக்கின் பரிகாரத்தை திருத்தம் செய்வதற்கு மனுதாரர் தரப்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மனுதாரருக்கு மஞ்சள்காமாலை மற்றும் கண் அறுவை சிகிச்சைக்காக சிகிச்சை எடுக்க வேண்டியிருந்ததால் மேற்படி தேதியில் நீதிமன்றத்தில் முன்னிலையாக இயலவில்லை என்றும், மேலும் மனுதாரருக்கு உள்ள ரத்தகொதிப்பு நோய் மற்றும் வயோதிகம் காரணத்தினால் மனுதாரரால் நடக்க இயலவில்லை என்றும், எனவே, அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க ஏற்பட்ட 581 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தை முன்வைக்க போதிய வாய்ப்பளித்தும் அவர்களது தரப்பு வாதம் முன்வைக்கவில்லை.

**6.3** மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6.4** அசல் வழக்கானது தாவா சொத்தை அளவீடு செய்து வாதி மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகளின் சொத்தின் நான்கு எல்லையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும் 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.5** கடந்த 22.08.2022ம் தேதியன்று அசல் வழக்கில் பரிகார பத்தியில் திருத்தம் மேற்கொள்ளவில்லை என்பதாலும், மனுதாரர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தாலும் அசல் வழக்கில் தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க ஏற்பட்ட 581 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.6** மனுதாரருக்கு ஏற்பட்ட மஞ்சள் காமாலை நோயின் காரணமாக மனுதாரரால் அவரது வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்றும், மஞ்சள் காமாலை நோயிலிருந்து மனுதாரர் மீண்டு வந்த பிறகு மனுதாரருக்கு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு மருத்துவரின் அறிவுறுத்தலின்படி 6 மாத காலம் ஓய்வில் இருந்த காரணத்தாலும், மனுதாரரால் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்று மனுவில் குறிப்பிட்டுள்ள காரணத்தை நிரூபிக்கும் வகையில் எவ்வித மருத்துவ ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. மேலும் எந்த தேதியில், எந்த மருத்துவமனையில், எந்த மருத்துவரிடம் மேற்படி சிகிச்சைகளை மனுதாரர் எடுத்துகொண்டார் என்பதையும் மனுவில் தெரிவிக்கவில்லை.

**6.7** இதுகுறித்து **மாண்புமிகு உயர்நீதிமன்றம் வழங்கிய முன் தீர்ப்புகளான** **" Nancy Jeevadas Vs Rajendhar & another 2014(2) MWN ( Civil) 586, Abdul ajees Vs Venkatasamy Naiker & others 2011(1) TLNJ 358 ( Civil), Subramaniam and another Vs Veerakumar 2014(2) MWN ( Civil ) 74 & Prabha Vs John Kennady 2014(3) CTC 715** என்ற வழக்குகளில் காலதாமதத்தை மன்னிக்க கேட்டும் மனுவில் ஒவ்வொரு நாள் காலதாமதத்திற்கும் சரியான ஏற்றுக்கொள்ளதக்க காரணம் குறிப்பிடவில்லை என்றால் மேற்படி காலதாமதத்தை மன்னிக்கக் கூடாது என்று முன்தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே, இம்மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள 581 நாட்கள் காலதாமதத்திற்கான காரணத்தை தக்க சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்து, மனுவை தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.02 15:07:02 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

<u>**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :**</u> இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.02 15:07:31 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.